# KEMENTERIAN PELAJARAN MALAYSIA

# தேசியப்பள்ளிக்கான தர அடைவு ஆவணம்

# தமிழ்மொழி

# ஆண்டு 1

# DOKUMEN STANDARD PRESTASI

# BAHASA TAMIL SEKOLAH KEBANGSAAN

# TAHUN 1

UPDATED 04 JAN 2012

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலை இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

# பொருள் விளக்கம்

**கட்டு** என்பது தனிநபர் பற்றிய அடைவு நிலையை அறிக்கைவழி வெளியிடுவதற்குப் படிநிலைகளால் வகுக்கப்பட்ட ஒரு குறிப்பி.

**தரம்** என்பது தனிநபர் பற்றிய ஒரு குறிப்பிட்ட செயலெல்லையின் அடைவு நிலையை பொதுப்படையாகவும் முழுமையாகவும் விளக்கும் கூற்றாகும்.

**தர அடைவு** என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையைத் தரக்கூற்று அடிப்படையில் மதிப்பிடும் மற்றும் மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும். தரத்தில் படர்ச்சி இரண்டு நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; ஒன்று படுக்கைநிலைப் படர்ச்சி (கட்டுமம்) மற்றொன்று நிமிர்வுநிலைப் படர்ச்சி (கட்டு). இது, மாணவரின் கற்றல் வளர்ச்சியை ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான சொல் அல்லது சொற்றொடர் அடங்கிய தகுதிப்பேற்றின்வழி காட்டவல்லது.

**தரவிவரிப்பு** என்பது தரக்கூற்று அடிப்படையில் மாணவர்கள் என்ன அறிந்திருக்கின்றனர், எதனை ஆளத் தெரிந்திருக்கின்றனர் என்பதனை மதிப்பிடக்கூடிய கூற்றாகும்.

**தரச்சான்று**

**மாணவர்கள்** : தர விவரிப்பை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு மாணவர்கள் தாங்கள் அறிந்திருப்பதையும் ஆளத் தெரிந்திருப்பதையும் செயல்படுத்துகின்றனர் என்பதனை விளக்குகின்ற கூற்று.

**கருவி** : நிழற்படங்கள், வரைப்படங்கள், வரலாற்றுக் குறிப்புகள், அறிக்கைகள் போன்ற செயற்பாங்கு அல்லது உற்பத்திப் பொருள் வடிவிலான இடுபணிகளைச் செயல்படுத்தி அவற்றை ஆதாரமாகக் காட்டப்பெறுகின்ற பொருள்.

**கருவி** என்பது எழுத்துச் சோதனை, வாய்மொழிச் சோதனை, செய்துகாட்டல், செய்முறைச் சோதனை போன்ற செயலெல்லையில் மாணவரின் அடைவுநிலையையும் ஆளுமையையும் மதிப்பிடுவதாகும்.

# தர அடைவுச் சட்டகம்

| கட்டு | தரம் |
|---|---|
| 1 | அறிதல் |
| 2 | அறிதலும் புரிதலும் |
| 3 | அறிதலும்  புரிதலும் ஆளலும் |
| 4 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும் |
| 5 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் |
| 6 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும்  முன்மாதிரியாதலும் |

**கட்டு விளக்கம்**

| கட்டு | தரக்கூற்று | விளக்கம் |
|---|---|---|
| 1 | அறிதல் | மாணவர்கள், அடிப்படைக் கூறுகளை அறிந்திருப்பர் அல்லது அடிப்படைத் திறன்களை நிறைவேற்றும் அல்லது அடிப்படைக் கூறுகளுக்கு ஏற்பத் துலங்கும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 2 | அறிதலும் புரிதலும் | மாணவர்கள், தொடர்புமுறையை மாற்றியமைப்பதிலும் அல்லது பொருள்பெயர்ப்புச் செய்வதிலும் கற்றவற்றைத் தெளிவு படுத்துவதிலும் புரிந்திருக்கும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 3 | அறிதலும் புரிதலும் ஆளலும் | மாணவர்கள், அறிவாற்றல் துணைக்கொண்டு சூழலுக்கேற்ப குறிப்பிட்ட திறன்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 4 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும் | மாணவர்கள், சரியான முறையிலும் பண்பாகவும் குறிப்பிட்ட திறனை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 5 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளல் | மாணவர்கள், புதிய சூழலில் சரியான முறையிலும் நிலையாகவும் நேர்நிலையாகவும் அல்லது சீரான முறையிலும் குறிப்பிட்ட திறன்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 6 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் முன்மாதிரியாதலும் | மாணவர்கள், ஆக்கச் சிந்தனை மற்றும் புத்தாக்கச் சிந்தனையை வெளிப்படுத்தவும், கோரிக்கையை நிறைவேற்ற முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றிருப்பதோடு, அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளவும் தகவல்களைப் பரிமாறவும் கலந்துரையாடவும் நிலையான பண்புடன் முன்மாதிரியான மொழியையும் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருப்பர். |

## குறியிலக்கு

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவர்கள் தமிழ்மொழி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் திறனைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் சமூகத் தொடர்பினை ஏற்படுத்தவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிவகுக்கின்றது. மேலும், மாணவர்களுக்கிடையே நன்னெறிக் கூறு, நாட்டுப்பற்று, ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## நோக்கம்

தேசியப்பள்ளித் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. அன்றாட உரையாடலிலும் முறையான சூழல்களிலும் பேசப்படும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொள்ளுதல்.
2. பல்வேறு சூழலுக்கு ஏற்ப சரியான உச்சரிப்புடன் சரளமாகப் பேசுதல்.
3. கருத்துகளைத் திரட்ட கலந்துரையாடுதல், விவாதித்தல்.
4. அறிவு, இலக்கியம் சார்ந்த பல்வேறு எழுத்துப் படிவத்தை வாசித்தல்; கருத்துகளைத் திரட்டி ஆக்கப்பூர்வமாகப் பரிசீலித்தல்.
5. பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நன்னெறிப் பண்பை வளர்த்தல்.
6. பெற்ற அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.
7. பல்வேறு நடவடிக்கையில் சரியான உச்சரிப்பு, எழுத்து, கலைச்சொற்கள், இலக்கணம் ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துதல்.
8. செய்யுள், மொழியணியின் பொருளை அறிந்து உய்த்துணரவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளுதல்.

| கட்டு | தரக்கூற்று |
|---|---|
| 1 | கேட்டல் – பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களின் அடிப்படைக் கூறுகளை அறிந்திருத்தல். |
| 2 | செவிமடுத்த, வாசித்த, எளிமையான சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். |
| 3 | செவிமடுத்த, வாசித்த எளிமையான தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். |
| 4 | செவிமடுத்த, வாசித்த தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைச் சரியான முறையில் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். |
| 5 | பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; அவற்றைச் சரியான முறையில் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். |
| 6 | பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; பகுத்தறிதல்; அவற்றைச் சரியான முறையில் துல்லியமாகப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் படைத்தல். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **1**<br><br>**அறிதல்** | **B1**<br>கேட்டல் - பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களின் அடிப்படைக் கூறுகளை அறிந்திருத்தல். | **B1 DL1**<br>செவிமடுத்த எழுத்துகளின் ஒலிகளை அறிதல். | **B1 DL1 E1**<br>செவிமடுத்த எழுத்துகளின் ஒலிகளை அடையாளங்காட்ட இயலும்.<br>▪ உயிரெழுத்துகள்<br>▪ ஆய்த எழுத்து<br>▪ மெய்யெழுத்துகள்<br>▪ உயிர்மெய்யெழுத்துகள்<br>▪ கிரந்த எழுத்துகள் |
| | | **B1 DB1**<br>சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல். | **B1 DB1 E1**<br>சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்க இயலும்.<br>▪ உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள்<br>▪ மெய்யெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ உயிர்மெய்யெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்கள் |
| | | **B1 DT1**<br>தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தை அறிதல். | **B1 DT1 E1**<br>தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தை அறிந்து எழுத இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **2**<br><br>**அறிதலும் புரிதலும்** | **B2**<br>செவிமடுத்த, வாசித்த, எளிமையான சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். | **B2 DL1**<br>செவிமடுத்த எழுத்தின் ஒலியை மீண்டும் ஒலித்தல். | **B2 DL1 E1**<br>செவிமடுத்த எழுத்தின் ஒலியை அளபுக்கு ஏற்ப ஒலித்துக்காட்ட இயலும்.<br>▪ உயிரெழுத்துகள்<br>▪ ஆய்த எழுத்து<br>▪ மெய்யெழுத்துகள்<br>▪ உயிர்மெய்யெழுத்துகள்<br>▪ கிரந்த எழுத்துகள் |
| | | **B2 DB1**<br>சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்துப் புரிந்து கொள்ளுதல். | **B2 DB1 E1**<br>சரியான உச்சரிப்புடன் வாசித்துப் புரிந்து கொள்ள இயலும்.<br>▪ உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள்<br>▪ மெய்யெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ உயிர்மெய்யெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | **B2 DT1**<br>நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுதல். | **B2 DT1 E1**<br>கொம்பு, வளைவு, சுழி, விலங்கு ஆகியவற்றைக் கொண்ட எழுத்துகளைச் சரியான அளவுடன் நல்ல கையெழுத்தில் தூய்மையாக எழுத இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
| --- | --- | --- | --- |
| **3**<br><br>**அறிதலும் புரிதலும் ஆளலும்** | **B3**<br>செவிமடுத்த, வாசித்த, எளிமையான தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். | **B3 DL1**<br>சொற்களைச் சரியாக உச்சரித்தல். | **B3 DL1 E1**<br>செவிமடுத்த சொற்களைச் சரியாக உச்சரிக்க இயலும்.<br>▪ ஓரெழுத்து- ஈரெழுத்துச் சொற்கள்<br>▪ கிரந்த எழுத்துகளைக் கொண்ட சொற்கள்.<br><br>**B3 DL1 E2**<br>செவிமடுத்த செய்யுளையும் மொழியணியையும் சரியாக உச்சரிக்க இயலும். |
| | | **B3 DB1**<br>சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்துப் புரிந்து கொள்ளுதல். | **B3 DB1 E1**<br>சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்துப் பொருள் கூற இயலும்.<br>▪ உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள்<br>▪ மெய்யெழுத்து கொண்ட சொற்கள்<br>▪ உயிர்மெய்யெழுத்து கொண்ட சொற்கள்<br>▪ கிரந்த எழுத்து கொண்ட சொற்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | **B3 DT1**<br>சொற்களைப் பார்த்து எழுதுதல். | **B3 DT1 E1**<br>நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் பார்த்து எழுத இயலும்.<br>▪ சொல்<br>▪ சொற்றொடர்<br>▪ செய்யுள்<br>▪ மொழியணி |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
| --- | --- | --- | --- |
| **4**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும்** | **B4**<br>செவிமடுத்த, வாசித்த, எளிமையான தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைச் சரியான முறையில் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். | **B4 DL1**<br>செவிமடுத்தவற்றைப் பொருளறிந்து கூறுதல். | **B4 DL1 E1**<br>செவிமடுத்தவற்றைப் பொருளறிந்து தெளிவாகக் கூற இயலும்.<br>▪ சொல்<br>▪ சொற்றொடர்<br>▪ செய்யுள்<br>▪ மொழியணி |
| | | **B4 DB1**<br>செவிமடுத்த சொற்றொடர்களை வாசித்துப் புரிந்து கொள்ளுதல். | **B4 DB1 E1**<br>இரண்டு சொற்கள் கொண்ட சொற்றொடர்களை வாசித்துப் பொருள் கூற இயலும். |
| | | **B4 DT1**<br>சொல்வளம் பெருக்குதல். | **B4 DT1 E1**<br>சொற்களை உருவாக்கி எழுத இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **5**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும்** | **B5**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த, பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; அவற்றைச் சரியான முறையில் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். | **B5 DL1**<br>சரியான சொல், சொற்றொடரைப் பயன்படுத்தி பண்புடன் பேசுதல். | **B5 DL1 E1**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த சொல், சொற்றொடரைப் பயன்படுத்திப் பேச இயலும்.<br><br>**B5 DL1 E2**<br>மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேச இயலும். |
| | | **B5 DB1**<br>சொற்றொடர்களை வாசித்துப் புரிந்து கொள்ளுதல். | **B5 DB1 E1**<br>மூன்று சொற்கள் கொண்ட சொற்றொடர்களை வாசித்துப் பொருள் கூற இயலும். |
| | | **B5 DT1**<br>சொல்வதை எழுதுதல். | **B5 DTI E1**<br>சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுத இயலும்.<br>▪ ஓரெழுத்துச் சொற்கள்<br>▪ ஈரெழுத்துச் சொற்கள் |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **6**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் முன்மாதிரியாதலும்** | **B6**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த, பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; பகுத்தறிதல்; அவற்றைச் சரியான முறையில் துல்லியமாகப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் படைத்தல். | **B6 DL1**<br>பொருத்தமான சொல், சொற்றொடரைப் பயன்படுத்திப் பேசுதல். | **B6 DL1 E1**<br>பொருத்தமான சொல், சொற்றொடரைப் பயன்படுத்தித் துல்லியமாகப் பேச இயலும்.<br>▪ மரியாதைச் சொற்கள்<br>▪ குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள்<br>▪ கிழமைகளின் பெயர்கள்<br>▪ செய்யுள்<br>▪ மொழியணி<br><br>**B6 DL1 E2**<br>சொல்லிணக்கணம் அறிந்து வாக்கியங்கள் கூற இயலும்.<br>▪ திணை<br>▪ பால்<br>▪ எண் |
| | | **B6 DB1**<br>சொற்றொடர்களை வாசித்துப் புரிந்து கொள்ளுதல். | **B6 DB1 E1**<br>செய்யுள் மொழியணிகளை வாசித்துச் சுயமாகப் பொருள் கூற இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B6 DT1**<br>எளிய வாக்கியங்களை எழுதுதல். | **B6 DT1 E1**<br>சொற்களைப் பொருளுணர்ந்து எளிய வாக்கியங்களில் அமைக்க இயலும்.<br><br>**B6 DT1 E2**<br>சொல்லிணக்கணம் அறிந்து வாக்கியங்கள் எழுத இயலும்.<br>▪ திணை<br>▪ பால்<br>▪ எண் |